# இல்லக விளக்கு



**இந்துபோர்ட்**

## சு. இராசரத்தினம்

அவர்களின்

**142**ஆவது பிறந்ததின

வெளியீடு

**2026**


**சைவ வித்தியா விருத்திச் சங்கம்**

கலாசாலை வீதி, திருநெல்வேலி,

யாழ்ப்பாணம், இலங்கை.

# சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## பணிப்பாளர் சபை
## உறுப்பினர்கள் விபரம்

**போசகர்கள்**

திரு.சோ. பத்மநாதன்
திருமதி.ச. மனோன்மணி
திருமதி.செ.நாச்சியார்

| | |
|---|---|
| தலைவர் | : திரு.சு.சத்தியேந்திரன் |
| உபதலைவர்கள் | : திருமதி சி.ராதாகிருஸ்ணன் |
| | திரு.இ.சந்திரகுமார் |
| செயலாளர் | : திரு.த.தவரூபன் |
| உபசெயலாளர் | : திரு.இ.பசுபதீஸ்வரன் |
| நிதிச்செயலாளர் | : திரு.க.க.அருள்வேல் |
| திட்டப்பணிப்பாளர்கள் | |
| இல்லம் | : திருமதி கு.பிரதாபராஜன் |
| கல்வி | : வைத்தியர் பரா. நந்தகுமார் |
| சமயம்/ கலை, கலாசாரம் | : திருமதி ரஜனி குமாரசிங்கம் |
| மருத்துவம் | : வைத்தியர் தி.சுதர்மன் |
| பயிற்சி/ விளையாட்டு | : திரு.து.வாகீஸ்வரன் |
| பண்ணை | : திரு.இ.சுத்தானந்தன் |

உறுப்பினர்கள்

கலாநிதி சி.பத்மராஜா
திரு.இ.ராஜாமகேந்திரசிங்கம்
திரு.பா.பாலகணேசன்
கலாநிதி சி.விஜயகுமார்
திரு.நா.கிருஷ்ணபிள்ளை
திரு.த.சிவரூபன்

# இல்லக் கீதம்

**பல்லவி**

இறைவா நின் திருக்கோயில் வலம் வந்தோம் - உன்
இரு பாதம் துணை நம்பித் தொழுகின்றோம் (இறைவா)

**அநுபல்லவி**

நிறைவாழ்வு தரும் இல்ல நிழல் வந்தோம் - எம்
நினைவெல்லாம் ஈடேற விழைகின்றோம் (இறைவா)

**சரணம்**

அன்புக்கும் பரிவுக்கும் எமதில்லம் - ஆ
தரவற்ற சிறுவர்க்கும் எமதில்லம்
பண்புக்கும் ஒழுங்குக்கும் எமதில்லம் - எமைப்
பாலித்து நிறைவாழ்வு தருமில்லம் (இறைவா)

கலை கல்வி தொழில் யாவும் பயில் கோயில் - எமைக்
கண்காணித் துருவாக்கும் திருக்கோயில்
சிலையாக நிற்கின்ற மூதாதை - அந்த
தெய்வீக மனிதர் நம் வழிகாட்டி (இறைவா)

தொண்டுள்ளம் அன்புள்ளம் துணையாக - இளந்
தோளேந்தித் துணிவோடு நடக்கின்றோம்
ஏன்றென்றும் எமதில்ல நினைவெம்மை
ஈடேற்றும் எம் வாழ்வில் ஒளியேற்றும். (இறவைா)

ஆக்கம்:

**கவிஞர் சோ.பத்மநாதன்**




தொலைபேசி /Tel: 021 222 6525, 021 320 7897
வட்சப் /WhatsApp: +94 76 300 4877
முகநூல் /Facebook: சைவ வித்தியா விருத்திச்சங்கம்
(Hindu Board Of Education)
இணையம் /web : www.thehinduboard.org
மின்னஞ்சல் /e-mail: hinduboard_edu@yahoo.com,
hinduboard_edu@hotmail.com

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

கலாசாலை வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம், இலங்கை.

# இந்துபோர்ட் இராசரத்தினம் (1884 - 1970)

இந்துபோர்ட் இராசரத்தினம் என அழைக்கப்படும் சுப்பிரமணியம் இராசரத்தினம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு தமிழ் வழக்கறிஞரும், சைவ சமய பெரியாரும் ஆவார். சமூதாயத்தின் நலிவுற்ற குடும்ப சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்கும், ஈழத்து சைவ சமய வளர்ச்சிக்கும் இவர் ஆற்றிய பணிகள் மிகவும் போற்றத்தக்கவை.இவரைப் பற்றிய முக்கிய தகவல்கள்:பிறப்பு: 1884, யூலை 4 அன்று யாழ்ப்பாணம் கோப்பாயில் பிறந்தார்.கல்வி: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி கற்று வழக்கறிஞரானார்.அரசியல் பணி: 1924 முதல் 1931 வரை இலங்கை சட்டவாக்கப் பேரவையில் உறுப்பினராகச் செயலாற்றினார்

இந்துபோர்ட் சு. இராசரத்தினம் அவர்கள், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நசுக்கப்பட்டிருந்த ஈழத்துச் சைவக் கல்வி மரபைக் காக்கவும், சமய விழுமியங்களை வளர்க்கவும் ஆற்றிய சமயக் கல்வித் தொண்டுகள் அளப்பரியவை. நல்லூர் ஆறுமுக நாவலர் மற்றும் சேர் பொன். இராமநாதன் ஆகியோரின் சைவ மரபைப் பின்பற்றி அவர் இப்பணிகளை முன்னெடுத்தார்.

அவரது முதன்மையான சமயக் கல்வித் தொண்டுப் பணிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

## 1. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தோற்றம்

சங்கத்தை நிறுவுதல்: கிறித்தவ மிஷனரிகளின் மதமாற்றக் கல்விக்கு மாற்றாக, சைவப் பின்னணியில் பிள்ளைகளுக்குக் கல்வி வழங்க விரும்பினார். இதற்காக, சேர் பொன். இராமநாதன் அவர்களின் துணையோடு 1923 ஆம் ஆண்டில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை நிறுவினார்.இதன் செயலாளராகவும் தலைவராகவும் இருந்து, தனது வாழ்நாள் முழுவதையும் சைவக் கல்விக்காக அர்ப்பணித்தார்.

## 2. பாடசாலைகளின் வலையமைப்பை உருவாக்குதல்

நூற்றுக்கணக்கான பாடசாலைகள்: யாழ்ப்பாணக் குடாநாடு மட்டுமன்றி முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், பதுளை, நாவலப்பிட்டி, புத்தளம் மற்றும் நெடுந்தீவு போன்ற பின்தங்கிய பல இடங்களிலும் 150-க்கும் மேற்பட்ட சைவப் பாடசாலைகளை உருவாக்கினார்.

பல்வேறு கல்வி நிறுவனங்கள்: இவரது நிர்வாகத்தின் கீழ் 174 சைவப் பாடசாலைகள், 7 ஆங்கிலப் பாடசாலைகள், மற்றும் 16 பன்னவேலைப் (தொழிற்பயிற்சி) பாடசாலைகள் இயங்கின.

### 3. சைவாசிரியர் பயிற்சி நிறுவனம் (1928)

சைவப் பாடசாலைகளில் சமயப் பற்றுடன் கற்பிப்பதற்கென முறையான சைவ ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருந்தனர்.

இப்பிரச்சினைக்குத் தீர்வாக, அக்டோபர் 1928 இல் திருநெல்வேலியில் சைவாசிரியர் பயிற்சி நிறுவனத்தை ஆரம்பித்தார். இதன் மூலம் சைவ விழுமியங்களை அறிந்த தகுதியான ஆசிரியர்களை உருவாக்கினார்.

### 4. பண்ணிசை மற்றும் திருமுறைத் தொண்டு

சைவ சமயத்தின் மூல நூல்களான திருமுறைகளைப் பண்ணோடு பாடிப் படிப்பதில்தான் முழுப் பலனும் உண்டு என்பதில் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தார். இதனால், 1954 ஆம் ஆண்டில் தனது வித்தியாசாலையில் பண்ணிசை ஆசிரியர்களை பிரத்யேகமாக நியமித்து, மாணவர்களுக்கான பண்ணிசை வகுப்புகளைத் தொடங்கினார்.

### 5. சமூக மற்றும் சட்டப் போராட்டங்கள்

சட்டப் பேரவை முழக்கம்: 1924 முதல் 1931 வரை இலங்கை சட்டவாக்கப் பேரவையில் வட மாகாணப் பிரதிநிதியாக இருந்தபோது, சைவர்களுக்குத் தீங்காக இருந்த பல சட்டங்களைத் திருத்தப் போராடினார்.

சமய உரிமை மீட்டல்: கிறித்தவப் பள்ளிகளுக்கு அருகாமையில் சைவப் பள்ளிகளை அமைப்பதற்கும், அரசாங்கத்திடமிருந்து அவற்றுக்குரிய கல்வி நிதி மற்றும் நன்கொடைகளைப் பெற்றுத் தருவதற்கும் வழிவகுத்தார்.

அநாதை இல்லங்கள்: வறிய, ஆதரவற்ற மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகத்துச் சைவச் சிறார்கள் தங்கிப் படிப்பதற்காக 2 பெரிய அநாதை இல்லங்களையும் விடுதிகளையும் அமைத்தார்.

இவரது அயராத உழைப்பினால் 1958 ஆம் ஆண்டில் 187 அரசாங்க நன்கொடை பெறும் பள்ளிக்கூடங்கள் இவரது சங்கத்துடன் இணைந்து இயங்கும் அளவுக்குப் பிரம்மாண்டமாக வளர்ந்தது. இதனாலேயே இவர் ஈழத்து வரலாற்றில் ”இந்துபோர்ட் இராசரத்தினம்” என்றே நிலைத்துப்போனார்.

# சைவ வித்தியா விருத்திச் சங்கச் செயற்பாடுகள்

ஈழத்தில் சைவமும் தமிழும் காக்க சேர் . பொன் . இராமநாதன் தலைமையில் 1923.12.09 அன்று ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனமே சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆகும். இச்சங்கம் 1960 களின் தொடக்கம் வரை (187 நிறுவனங்களை) பாடசாலைகள், ஒரு சைவாசிரியர் கலாசாலை, தொழிற்பயிற்சி நிலையங்கள் , இரு சிறுவர் இல்லங்கள் என நடாத்தியது. பாடசாலைகளையும் சைவசிரியர் கலாசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின் சங்கம் இரு சிறுவர் இல்லங்களை மட்டும் நிர்வகித்து வந்துள்ளது. 01.01.2014 கருணை இல்லத்தையும் இச் சங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது.

## நிர்வாகம்

இச் சங்கம் தலைவர், செயலாளர், நிதிச் செயலர் உள்ளிட்ட பத்தொன்பது பணிப்பாளர்களைக் கொண்ட சபையால் நிர்வகிக்கப்படுகிறது. இவர்களுள் இல்லம், கல்வி, மருத்துவம், சமயம், பண்ணை, தொழிற்பயிற்சி, எனும் ஆறு முக்கிய விடயங்களுக்கு உரிய திட்டப் பணிப்பாளர்களும் உள்ளடங்குவர். பொதுச்சபையே இப்பணிப்பாளர் சபையை நியமிக்கின்றது. இப் பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பினர்களும் ஊதியம் பெறாது சேவை மனப்பான்மையோடு தொண்டாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

தற்போது இங்கு நிர்வாக அலுவலர் ஒருவர், நிதி உதவியாளர்கள் இருவர், முகாமைத்துவ உதவியாளர் ஐவர், தையற் பயிற்சியாளர் ஒருவர், நூலகர் ஒருவர், முகாமையாளர் மூவர், உபவிடுதிக் காப்பாளர் பதின்மூன்று பேர், சிற்றூழியர் ஒருவர், சாரதிகள் இருவர், காவலாளிகள் மூவர் சமையாலாளர்கள் ஏழு பேர் என அமைந்த ஆளணியினர் சங்கச் செயற்பாடுகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு உதவிவருகின்றனர்.

## இல்லங்கள்

எமது சங்கம் ஆரம்ப காலம் (1928) தொடக்கம் இரு சிறுவர் இல்லங்களை கலாசாலை வீதி, திருநெல்வேலியில் நடாத்தி வருகிறது

தற்போது எமது சங்கத்தால் கீழ்வரும் இல்லங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு இல்லத்துக்கும் ஒவ்வொரு முகாமையாளர் பொறுப்பாக நியமிக்கப்பட்டிருப்பதுடன் ஒவ்வொரு இல்லத்துக்கும் முகாமையாளர் உட்பட ஏழு பேர் கொண்ட முகாமைத்துவ சபை ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

1. சைவச் சிறுவர் இல்லம் (ஆண்கள்)
2. சைவச் சிறுவர் இல்லம் (பெணகள்)
3. கருணை இல்லம் (பெண்கள்)

ஆண்கள் இல்லத்தில் தற்போது 57 ஆண்பிள்ளைகளும் பெண்கள் இல்லத்தில் தற்போது 70 பெண்பிள்ளைகளும் தங்கியுள்ளனர். உரும்பிராயில் இயங்கிவரும் கருணை இல்லத்தில் தற்போது 35 பெண்பிள்ளைகளும் தங்கியுள்ளனர்.

## மாணவர் அனுமதி

வடமாகண சிறுவர் நன்னடத்தைப் பிரிவினராலும் நீதிமன்றாலும் இல்லங்களுக்குச் சிறுவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். சிறார்களின் நலனை நீதிமன்றமும் சிறுவர் நன்னடத்தை திணைக்களமும் எமது முகாமைத்துவ சபையினருடன் இணைந்து கண்காணித்து வருகிறது.

## கல்விச் செயற்பாடுகள்

இரு சைவச் சிறுவர் இல்லங்களையும் சேர்ந்த சிறார்கள் யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று வருகின்றனர். கருணை இல்லத்தில் தங்கியுள்ள சிறார்கள் யா/ உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்திலும், யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் கல்வி பயில்கின்றனர். இவ் பாடசாலையில் இல்லாத பாடங்களுக்கு பிற பாடசாலையில் கற்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

## பிரத்தியோக வகுப்புக்கள்

இல்லச் சிறார்களுக்கான அனைத்தப்பாடங்களுக்கும் பிரத்தியோக வகுப்புகள் அவ்வவ் வில்லங்களில் நடைபெற்று வருகின்றன. இவ் வகுப்புகளில் இணைபாட விதானங்களும் கவின்கலை வகுப்புகளும், தொழிற்பயிற்சி வகுப்புகளும் உள்ளடங்குகின்றன. இவ் பிரத்தியோக வகுப்புகளுக்கு ஏறத்தாழ ரூபா 300,000 த்திற்கு மேல் செலவாகின்றமை குறிப்பிடத்தக்கது.

மற்றும் பல்கலைக்கழக வாய்ப்புக்களை பெறும் மாணவர்களுக்கு மடிக்கணினிகளும் வழங்கப்படுகின்றன.

## நிதி சார்ந்த தேவைப்பாடுகள்

இச் சங்கத்துக்கு தேவையான நிதி கருணை உள்ளம் கொண்ட உள்நாட்டு வெளிநாட்டு கொடையாளர்களால் வழங்கப்படும் நன்கொடைகள் மூலம் பெறப்படுகின்றது.

பெரும் வேலைத்திட்டங்களுக்கு சில அன்பர்கள் பெரும் தொகைகளைச் செலவு செய்ய முன்வந்துள்ளனர்.

## செலவுகள்

ஒவ்வொரு இல்லங்களுக்கும் ஏற்படும் செலவு, மாதாந்தம் அண்ணளவாக

| | |
|---|---|
| ஆண்கள் இல்லம் | ரூபா 1,500,000 |
| பெண்கள் இல்லம் | ரூபா 2,400,000 |
| கருணை இல்லம் | ரூபா 1,300,000 |

## எதிர்கால செயற்திட்டங்கள்

### பெண்கள் இல்லம்

1. கட்டிடங்களுக்கு வர்ணம் பூசுதல்.
2. உடை உலர விடும் கொட்டகையினை அமைத்தல்.
3. படிப்பு மண்டபங்களுக்கான தளபாட வசதியினை மேற்கொள்ளுதல்.
4. மண்டபங்களுக்கான கூரை திருத்த வேலைகள் மேற்கொள்ளுதல்.
5. உட்கூரை அமைப்பு வசதியினை ஏற்படுத்தல்.
6. சிறந்த மைதானம் அமைத்தல்.
7. தகவல் தொடர்பாடல் கல்விக்கான கணினிகள் வழங்குதல்

### ஆண்கள் இல்லம்

1. 100 பிள்ளைகள் தங்கக் கூடிய கட்டிடம் அமைத்தல்
2. மாணவர்களுக்கான கட்டில்கள் செய்து கொடுத்தல்
3. படிப்பு மண்டபங்களுக்கான தளபாட வசதியினை மேற்கொள்ளுதல்
4. கட்டிடங்களுக்கு வர்ணம் பூசுதல்
5. சிறந்த மைதானம் அமைத்தல்
6. சமையல் கூடத்தை நவீன படுத்துதல்
7. தகவல் தொடர்பாடல் கல்விக்கான கணினிகள் வழங்குதல்
8. சிறந்த நீராடும் பகுதியினை ஏற்படுத்தல்

**கருணை இல்லம்**

1. சிறந்த மலசல கூட வசதியினை ஏற்படுத்தல்
2. சிறந்த நீராடும் பகுதியினை ஏற்படுத்தல்
3. கட்டிடங்களுக்கு வர்ணம் பூசுதல்
4. சமையல் அறை பகுதியினை நவீனபடுத்துதல்
5. தகவல் தொடர்பாடல் கல்விக்கான கணினிகள் வழங்குதல்
6. கழிவு நீர்க்குழிகளின் அமைப்புகளினை மேற்கொள்ளுதல்
7. பிள்ளைகள் தங்குமிடங்களுக்கு மின்விசிறிகள் பொருத்துதல்

## இல்ல மாணவர்களது கல்வி, இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் சாதனைகள் (2025 – 2026)

**2025 ஆம் ஆண்டு தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்**

1. செல்வன் ம.சபிஷன் - 52
2. செல்வி ம.டிஜிதா - 59
3. செல்வி ம.கபீசா - 87

**2025 க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகள்**

1. செல்வி வி.லக்சனா - A2C
2. செல்வி அ.தர்சினி - BCS
3. செல்வி சி.தமிழினி - BCS
4. செல்வி யோ.மகிழினி - 3C
5. செல்வி பு.நவரூபினி - C2S
6. செல்வி டே.பவித்திரா - BCS
7. செல்வி யோ.டனுஜா - BCS
8. செல்வி K.டிலக்சனா - 2AB
9. செல்வி த.டிசாளினி - 2AB (2ஆம் தடவை)
10. செல்வி ஜெ.ஜெகதா - BCS
11. செல்வி S.தனுஜா - C2S

**2024 (2025) க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்**

1. செல்வி ர.திவ்வியா - A5C2S
2. செல்வி ச.சகானா - AB3C3S
3. செல்வி பே.கலையரசி - 2B4CS

4. செல்வி த.யதுசிகா - B4C2S
5. செல்வி இ.யதுர்சிகா - 4AB2CS
6. செல்வி தே.ஜிதுசா - 2BC6S
7. செல்வி நி.தாரணி - 2A2B2C2S
8. செல்வி மு.மதுசா - 2B4C4S
9. செல்வி கு.இசைப்பிரியா - B3C3S
10. செல்வி பி.நீலவேணி - B2C3S
11. செல்வி த.கஸ்தூரி - 4C3S

**2025 (2026) க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள்**

1. செல்வி ச.ஜதுர்சிகா - 6ABC
2. செல்வி தி.சானுஜா - 4B2C2S
3. செல்வி சு.ஜதுசா - 3B3C2S
4. செல்வி சி.கானகி - 2BC5S
5. செல்வி பா.நிஸ்மிதா - B3C2S
6. செல்வி நா.தர்சிகா - 4C3S

**வலய, மாவட்ட, மாகாண மட்டத்தில் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டிய இல்லச் சிறார்கள் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1) | த.கஸ்தூரி | 800m ஓட்டம் | மாகாண மட்டம் 1ம் இடம் |
| 2) | மோ.கோபிராம் | கராத்தே | மாகாண மட்டம் 2ம் இடம் |
| 3) | கி.சந்தோஸ் | கராத்தே | மாகாண மட்டம் 2ம் இடம் |
| 4) | மு.சஞ்சீவ | கராத்தே | மாகாண மட்டம் 2ம் இடம் |
| 5) | ச.பிருந்துஜா | சிறுகதை | வலய மட்டம் 3ஆம் இடம் |

**பல்கலைக்கழகம் அனுமதி பெற்ற சிறுமிகள் - A/L (2024)**

1) செல்வி யோ.கிருஸ்ணவேணி- இராமநாதன் நுண்கலைப்பீடம்
2) செல்வி ப.சாதனா - இராமநாதன் நுண்கலைப்பீடம்
3) செல்வி த.டிசாளினி- கோப்பாய் கல்வியற்கல்லூரி

- **2025ஆம் ஆண்டு வடக்கு மாகாணப் பாடசாலைகளில் சிறந்த மேசைப்பந்தாட்ட வீராங்கனை என த.கஸ்தூரி தெரிவுசெய்யப்பட்டார்.**

## இந்துபோர்ட் இராசரத்தினம் அவர்கள் ஞாபகார்த்த பரீட்சையில் சிறப்புப் புள்ளிகள் பெற்ற மாணவர்கள் விபரம்

**(சைவசமயம், தமிழ், கணிதம், விஞ்ஞானப்பாடங்களின் சராசரி)**

**தரம் - 6**

1) ம. கபிஷா 75
2) க. சானுஜா 64
3) ம. மதுஷன் 64

**தரம் - 7**

1) தெ. மதுசாலினி 83
2) ஜீ. ஜஸ்ரினா 77
3) ஆ. ரேமன் 62

**தரம் - 8**

1) க. கோபிசாந் 78
2) சி. உசாந்தன் 74
3) ந. பிருத்திகா 71

**தரம் - 9**

1) அ. நிதுஷா 76
2) மி. நிவேதா 73
3) ர. அஸ்வின் 61

**தரம் - 10**

1) பே. சரணியா 82
2) கே. இந்துஜா 74
3) க. கஜேந்தினி 69

**தரம் - 11**

1) அ.அபினி 93
2) சி.பவுசா 76
3) கா. கஜேந்தினி 73

**கலைப்பிரிவு மாணவர்களின் பாடங்களில் பெற்ற உயர் சராசரிப்புள்ளி பெற்றோர் விபரம்**

### A/L 2027

1) பே கலையரசி 86
2) த. யதுசியா 82
3) வா. விசாளினி 65

### A/L 2026

1) சி.டிசானா 83
2) ப.அனோஜினி 80
3) தெ. பிறைநிலா 79